**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 187 /2024 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு. சுதாகர் |
| Father’s/Husband Name | | திரு. கருப்பையன் |
| Village | | நெய்வேலி, வடபாதி |
| Taluk | | திருவோணம் |
| Age | | 42/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of August 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற இரண்டாம் நிலை காவலர் 1375 திரு.மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் நெய்வேலி வடபாதி, மழவராயர் தெருவில் வசித்து வருகிறேன், விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் அனைவரும் எனது ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 20.09.2015 ந் தேதி காலை 11.00 மணியளவில் விநாயகர் ஊர்வலம் சென்றபோது 3ம் எதிரி நடராஜன் வீட்டு முன்னாடி சென்றபோது எங்கள் வீட்டின் முன்னால் வெடி வெடிக்க கூடாது , தாரை தப்பட்டை அடிக்க கூடாது என்று நடராஜன் எங்களிடம் கூறினார். நாங்கள் அமைதியாக ஊர்வலம் சென்றோம். காவிரி ஆற்றங்கரையில் விநாயகர் சிலையை கரைத்துவிட்டு வீடு திரும்பினோம். பின்னர் அன்றைய தினம் மதியம் 3.00 மணியளவில் எங்கள் வீட்டு அருகில் நான், என் அண்ணன் செல்லதுரை, என் அக்கா மாலா ஆகியோர் பேசி கொண்டிருந்தபோது அப்போது எதிரிகள் வந்து தேவடியா பயலே என்று அசிங்கமாக பேசி 1ம் எதிரி திருமுருகன் கம்பால் எனது இடது கை மணிகட்டில் அடித்தார்.

எனது அண்ணன் செல்லதுரை ஏன் என்று அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது திருமுருகன், பாலமுருகன் கம்பால் செல்லதுரை முதுகில் அடித்தார்கள். மேலும் திருமுருகன் அடிக்கும்போது செல்லதுரை தேக்கும் போது வலது முன்னங்கை கட்டைவிரலில் காயம் ஏற்பட்டது. மேலும் காயம் பட்ட எங்களை பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு விசாரணைக்கு வந்த வாட்டாத்திக்கோட்டை போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை